# ஹிந்து வாழ்க்கை முறை

18 வயது நரேந்திரன் மனதில் எழுந்த கேள்வி, "கடவுளைப் பார்த்தவர் யாரேனும் உண்டா?", ராமகிருஷ்ணரின் பதில், நரேந்திரன் விவேகானந்தரானார் - கடவுளைக் கண்டவர் பாரதத்தில் உண்டு! பாரதத்திற்கு வெளியே இல்லை!!

மற்ற மதங்களைத் தோற்றுவித்தவர் உண்டு. நமது ஹிந்து தர்மம் தான் உலகிலேயே மிகப் பழமையானது. விஞ்ஞானத்தைத் தோற்றுவித்தவர் என யாரும் இல்லை. ஹிந்து தர்மத்தையும் தோற்றுவித்தவர் என்று எவரையும் சொல்ல முடியாது. இது இறைவனாலேயே தோற்றுவிக்கப்பட்ட தர்மம். பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு ரிஷிகளால் இது வளர்க்கப்பட்டது. ஹிந்து தர்மம் என்பது ஒரு மதம் அல்ல. இது ஒரு வாழ்க்கை முறை. அறிவின் துணை கொண்டு விவேகத்துடன் வாழும் முறை.

## ஹிந்து தர்மத்தில் உள்ள சில கோட்பாடுகள்:

1. ஸர்வ வியாபி - கடவுள் எல்லா இடத்திலும் இருக்கிறார்.

தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார். (கிறிஸ்தவத்தில் பர மண்டலம்; இஸ்லாத்தில் 7-வது வானம்)

2. ஸர்வ ஸ்பர்ஷி - தத் த்வம் அஸி (அது நீ ஆனாய்) - அனைத்து உயிரிலும் இறைவன் - அதனால் குழந்தைக்கு இறைவனின் பெயர்களை சூட்டுகிறோம். (ஆனால் ஏசு அல்லது அல்லா என்று எவரும் பெயரிடுவதில்லை!)

வித்யா வினயசம்பன்னே ப்ராம்மணே கவி ஹஸ்தினி । ஶுனி சைவ ஸ்வபாகே ச பண்டிதா ஸமதர்ஶினஹ ॥ (கீதை 5.18). विद्याविनयसम्पन्ने ब्राह्मणे गवि हस्तिनि । शुनि चैव श्वपाके च पण्डिता: समदर्शिन: ॥ ஞானிகள் பிராமணனையும் பசுவையும் யானையையும் நாயையும் மற்றும் நாயை சாப்பிடுபவரையும் சமமாகவே பார்ப்பார்கள். ஏனென்றால் ஞானிகள் அனைத்துக்குள்ளும் இருக்கும் ஆத்மாவையே தரிசிப்பார்கள்.

நமஸ்தே - பாதிரியார் எட்டி ஸ்மித் ஜியார்ஜியா மாஸிடோனியா சர்ச்சில் விளக்கும் வீடியோ

https://youtu.be/5B42oH6nUWA?feature=shared

சரண ஸ்பர்ச - காலடி தொட்டு வணங்குதல்

3. மறுபிறப்பு

உடல் வேறு ஆன்மா வேறு. உடலுக்கு அழிவு உண்டு, ஆன்மாவுக்கு அழிவில்லை.அது மீண்டும் புதிய உடல் எடுத்து வரலாம். அல்லது இறைவனுடன் ஐக்கியமாகி விடலாம். RIP இல்லை.

4. கர்ம வினை (பாவ புண்ணிய நம்பிக்கை)

(நாம் செய்யும் நற்செயல்கள், தீய செயல்களே நமக்கு விதியாக வருகின்றன. தீதும் நன்றும் பிறர் தர வாரா). செய்த பாவங்களையெல்லாம் யாரோ மன்னிப்பார் என்பதில்லை!

பரோபகார: புண்யாய பாபாய பரபீடனம் - 18 புராணங்களின் சாராம்சமாக வியாஸர் கூறியது - மற்றவர்களுக்கு நன்மை செய்வது புண்ணியம், அடுத்தவர்களை வருத்தப்பட செய்வது பாவம்

5. பல தெய்வ வழிபாடு

(உண்மையில் பல தெய்வ வழிபாடு அல்ல. "ஏகம் ஸத் விப்ராஹா பஹுதா வதந்தி" என்கிறது ரிக் வேதம். உலகில் ஒரே கடவுள் என்ற தத்துவத்தை முதன் முதலில் கண்டுபிடித்து பிரகடனப்படுத்தியது ஹிந்து தர்மம்தான். அந்த ஒரே தெய்வத்தை அல்லது ஒரே சத்தியத்தை பல்வேறு வடிவங்களில் வழிபடுகிறோம். நாம் எப்படி விரும்புகிறோமோ தெய்வம் அந்த வடிவத்தில் நம்முடன் வந்து பேசும்.

## அன்றாட வாழ்வியல் ஒழுக்கம் (பஞ்ச மகா யக்ஞங்கள்)

**1. பிரம்ம யக்ஞம் (அ) ரிஷி யக்ஞம் மூலம் ரிஷிக்களின் கடன் தீர்க்கப்படுதல் - அவர்கள் இயற்றிய நூல்களை படித்தல்.**

நமது ஹிந்து தர்ம நூல்களான ராமாயணம் மஹாபாரதம், புராணங்கள் போன்றவற்றை நாமும் படிப்போம், மற்றவர்களையும் படிக்க வைப்போம்.

ஹிந்து தர்மத்தை புரிந்துகொள்ள, தனது வாழ்வில் கடைப்பிடிக்க ஏராளமான நூற்கள் உள்ளன. இன்னும் பல நூற்கள் வந்துகொண்டே இருக்கும். பல்வேறு புத்தகங்கள் எதற்காக? மனிதர்கள் எல்லோரும் ஒரே தரத்தில் இருப்பதில்லை. ஒவ்வொருவருக்கும் புரிந்து கொள்ளும் தன்மை வேறுபடும். அவரவர்களுக்குத் தகுந்தவாறு பல்வேறு புத்தகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, ஒரு ஆசிரியரிடம் ஒரு மாணவன் வந்து கணிதம் சொல்லிக்கொடுக்கும்படி

கேட்டான். அந்த ஆசிரியர் அந்த மாணவனுக்கு கணிதத்தை எதிலிருந்து ஆரம்பித்து சொல்லிக்கொடுப்பார்? 1+1=2 என்று தொடங்குவாரா, அல்லது கால்குலஸ், அல்ஜீப்ரா, ஜியோமெட்ரி என்ற அளவில் இருந்து தொடங்குவாரா? முதலில் அந்த மாணவன் எந்த அளவில் புரிந்துள்ளான் என்பதை கண்டுபிடித்து அங்கிருந்து தொடங்குவாரல்லவா? அதேபோல ஒவ்வொரு மனிதனுக்கும் தகுந்தவாறு பல்வேறு புத்தகங்கள் ஹிந்து தர்மத்தில் உள்ளன.

**2. தேவ யக்ஞம் மூலம் தெய்வங்களின் கடன் தீர்க்கப்படுதல் - பூஜை, வழிபாடு, விரதம் மூலமாக.**

அதிகாலை துயில் எழுதல், உள்ளங்கை பார்த்தல் - “ப்ரம்ம முகூர்த்ஹ்தே உத்திஷ்டே ஸ்வஸ்தோ ரக்ஷார்த்தமா ஆயுஷஹ” அதாவது பிரம்ம முகூர்த்தத்தில் துயில் கலைந்து எழுந்தால் ஆயுளும் ஆரோக்கியமும் பெருகும் என்று அஷ்டாங்க ஹ்ருதயம் சொல்கிறது. - மார்கழி தேவர்களுக்கு பிரம்ம முகூர்த்தம்

சூர்ய நமஸ்கார், யோகாசனம், ப்ராணாயாமம்

கூழானாலும் குளித்துக் குடி - காலையில் குளித்தல் - கங்கே ச யமுனே சைவ கோதாவரி சரஸ்வதி| நர்மதே சிந்து காவேரி ஜலேஸ்மின் சன்னதிம் குரு||

விபூதி, குங்குமம், சந்தனம், நாமம் ஆகிய நெற்றிக்குறி இடுதல். (காரணம் - ஹிந்து என்கிற அடையாளம், அழியும் உடல் மீது அழியாத சமயச் சின்னங்கள் அணிவது, இறை உணர்வை ஏற்படுத்துவது, உடலை இறைவன் உறையும் ஆலயமாக கருதி அதனை புனிதப்படுத்தும் நோக்கில் சமயச் சின்னங்கள் அணிதல்)

இறை வழிபாடு செய்தல். வீடே ஆலயம். வீட்டில் விளக்கேற்றல், விக்கிரக வழிபாடு செய்தல். கோலம் போடுதல். மணி அடித்தல். தோரணம் கட்டுதல். பஜனை, பாராயணம், அன்னதானம் ஆகியவை செய்தல்.

ஷஷ்டி விரதம், ஏகாதசி விரதம், பிரதோஷ விரதம், அமாவாசை, பௌர்ணமி தினங்கள் என கடைபிடிக்க வேண்டிய குறிப்புகள்.

எந்த வேலை செய்தாலும் இறை சிந்தனையோடு செய்தல்.

**3. பித்ரு யக்ஞம் மூலம் பித்ரு கடன் தீர்க்கப்படுகிறது - திதி, திவசம், அமாவாசையில் மூத்தோர் வழிபாடு.**

பெற்றோர்களை மதித்தல். வணங்குதல்.

இறந்த மூத்தோருக்கு திதி, தர்ப்பணம் அளித்தல்.

**4. நர (மனுஷ்ய) யக்ஞம் - சக மனிதர்களுக்கு தான தர்மம் செய்வதால் அவர்களுடைய கடன் தீர்கிறது.**

வசுதைவ குடும்பகம்

உலகமே நமது குடும்பம். வேண்டியவர், வேண்டாதவர் என்று யாரும் இல்லை / யாதும் ஊரே; யாவரும் கேளிர் / உலகை வாழ்த்துபவன் ஹிந்து - “ஸர்வே பவந்து ஸுகினஹ”

தன்னுடைய மதம் மட்டுமே சொர்க்கத்திற்கு வழிவகுக்கும், மற்ற மதங்களெல்லாம் நரகத்திற்குத்தான் இட்டுச் செல்லும் என்ற குறுகிய எண்ணம்

குருவை, ஆசிரியரை வணங்குதல்.

ஹரி ஓம் - ஹலோ-விற்குப் பதில்

அதிதி தேவோ பவ - மகாபாரதத்தில் கீரி

பெண்களை தாயாக மதித்தல், முன்னுரிமை தருதல் - சு.வி அமெரிக்க அனுபவம் - அன்று போர்க்களத்திலும் பெண்களுக்குப் பாதுகாப்பிருந்தது, இன்று பல்கலைக் கழகத்திலேயே பாதுகாப்பில்லையே

मातृवत् परदारेषु परद्रव्येषु लोष्टवत् ।

आत्मवत् सर्वभूतेषु यः पश्यति स पण्डितः ॥

हितोपदेशः-मित्रलाभः-14

பிறர் மனைவிகளைத் தன் தாயாகவும், பிறர் செல்வத்தை மண்ணைப் போலவும், எல்லா உயிர்களையும் தன் சுயமாகவும் பார்ப்பவன் ஞானமுள்ளவன்.

**5. பூத யக்ஞம் என்பது உயிரினங்களுக்கு உணவு, தீனி, தண்ணீர் அளிப்பதால் நாம் பட்ட கடன் தீர்கிறது. அரிசி மாவில் கோலம் போடுவது எறும்புகளுக்கு உணவு. காகத்திற்கு உணவு. பசுவிற்கு கீரை, நீர் அளித்தல் ஆகிய பல.**

நீர்நிலைகள், மரங்கள், இயற்கை ஆகியவற்றை இறைவன் அம்சமாக வழிபடுதல்.

சுவாமி விவேகானந்தர் ராமேஷ்வரம் கோவிலில் சொன்ன கதை

* இவ்விதம் ஹிந்து வாழ்க்கை முறை நான்கு வேதங்கள் வகுத்தபடி ஒழுக்க நெறியில், தர்ம அடிப்படையிலான வாழ்க்கை வாழ்தல்.